# பிரஸார் பாரதி
# அகில இந்திய வானொலி சென்னை – 4

28 07 2025 MONDAY 7.15 PM

# ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அர்ப்பணிப்பு உணர்வோடு முப்படையினர் மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை எதிர்க்கட்சிகள் குறை கூறுவதைவிடுத்து அவர்களை பாராட்ட வேண்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

2. பிரதமரின் ஊட்டச்சத்து திட்டத்தின்கீழ், 11 கோடி குழந்தைகளுக்கு தினமும் சத்தான உணவு பரிமாறப்படுவதாக மத்திய கல்வித்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி கூறியுள்ளார்.

3. புவி அறிவியல் அமைச்சகத்தின் ஆய்வுப்பணிகளின்மூலம் கொண்டுவரப்பட்ட 14 முக்கிய கருவிகளை மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் இன்று பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்.

4. தாய்லாந்தும் - கம்போடியாவும் இன்று நள்ளிரவு முதல் சண்டை நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டுள்ளன.

5. உலகக்கோப்பை மகளிர் செஸ் சாம்பியன் போட்டியில் பட்டம் வென்ற இந்தியாவின் திவ்யா தேஷ்முக்-கிற்கு குடியரசு தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

## இனி விரிவான செய்திகள் –

<<<<<>>>>>

ஆப்பரேஷன் சிந்தூர் வெற்றியை தேடித்தந்த முப்படைகளின் வலிமையையும், நேர்மையையும் புரிந்து கொள்ளாமல், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தேவையற்ற கேள்விகளை முன்வைப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று ஆப்பரேஷன் சிந்தூர் தொடர்பாக நடைபெற்ற விவாதத்தில் பேசிய அவர், பாகிஸ்தானால் இந்தியாவை குறிவைத்து தாக்க முடியாத அளவிற்கு இந்தியா வலிமையுடன் செயல்பட்டதாகவும் அவர் கூறினார்.

பாகிஸ்தானால் இந்தியாவின் எந்தவொரு ராணுவ கட்டமைப்பையும் தாக்க இயலவில்லை என்று அவர் தெரிவித்தார்.

நமது பாதுகாப்பு ஏற்பாடுகள், அசைக்கமுடியாத அளவிற்கு வலிமை பெற்றது என்றும், பாகிஸ்தான் ராணுவத்தின் தாக்குதல் முயற்சிகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

முப்படைகளின் சிறப்பான பணியை தாம் பாராட்டுவதாகவும், எதிர்க்கட்சியினர் மேஜைகளை தட்டி அவர்களுக்கான அங்கீகாரத்தையும், மரியாதையையும் அளிக்க வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையை அடுத்து, கடந்த மே மாதம் 10ஆம் தேதியன்று பாகிஸ்தான், இந்தியாவிடம் சண்டை நிறுத்தம் கோரி முறையிட்டதாக கூறினார்.

பலத்த தாக்குதலை தாங்க இயலாமல் பாகிஸ்தான் அடிபணிந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய ராணுவத்தின் தலைமை இயக்குநரை தொடர்பு கொண்டு, ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவின் எத்தனை ஜெட் விமானங்கள் இந்த ராணுவ நடவடிக்கையின் போது சுட்டு வீழ்த்தப்பட்டது என்ற கேள்வியை கேட்கும் எதிர்க்கட்சியினர், பாகிஸ்தான் தரப்பில் எத்தனை விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என்பது குறித்து ஏன் கேள்வி எழுப்பவில்லை என்றும் திரு. ராஜ்நாத் சிங் வினவினார்.

பாகிஸ்தானிலிருந்து தீவிரவாதத்திற்கு மூளையாக செயல்படுவோர்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற நோக்கில் தான் இந்த ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அவர் கூறினார்.

பஹல்காம் தாக்குதலில் தங்களது கணவரையும், சகோதரர்களையும் இழந்து தவிக்கும் பெண்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கிலேயே இந்த நடவடிக்கை தொடங்கப்பட்டதாகவும் அவர் தெளிவுபடுத்தினார்.

மிகச்சிறிய தகவல்களை கையில் எடுத்துக் கொண்டு நாட்டின் ஒட்டுமொத்த பாதுகாப்பு என்பதை மறந்து விட்டு, எதிர்க்கட்சியினர் பேசுவதை நிறுத்த வேண்டும் என்றும் திரு. ராஜ்நாத் சிங் கேட்டுக் கொண்டார்.

<<<<<>>>>>

பிரதமரின் ஊட்டச்சத்து திட்டத்தின் கீழ், 11 கோடி குழந்தைகளுக்கு தினமும் சத்தான உணவு, சூடாக பரிமாறப்படுவதாக மத்திய கல்வித்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், நாடுமுழுவதும் செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய அரசின் இந்த ஊட்டச்சத்து திட்டம், மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் உதவியோடு செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

அங்கன்வாடிகள் மற்றும் 1 முதல் 8ஆம் வகுப்பு வரையிலான அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் குழந்தைகள் இந்த திட்டத்தின் கீழ் பயன்பெற்று வருவதாக அவர் கூறினார்.

நாடுமுழுவதிலும் உள்ள 10 லட்சத்து 35 ஆயிரத்துக்கு மேற்பட்ட பள்ளிகளில் பயிலும் 11 கோடி குழந்தைகள், சத்தான உணவை உண்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

மாநிலங்களுக்கு உணவு தானியம், போக்குவரத்துச் செலவு மற்றும் நிர்வாக செலவுகளை மத்திய அரசு முழுமையாக அளித்து வருவதாகவும் அவர் கூறினார்.

கடந்த 2024-25ஆம் ஆண்டில் 9 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் 26 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியம், இந்திய உணவுக் கழகத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டதாகவும் திரு. ஜெயந்த் சௌத்ரி தெரிவித்தார்.

<<<<<>>>>>

புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் பல்வேறு அமைப்புகள் உருவாக்கிய 14 முக்கிய கருவிகள் மற்றும் பொருட்களை மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் இன்று பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற புவி அறிவியல் அமைச்சகத்தின் 19-ஆவது நிறுவன நாள் நிகழ்ச்சியில், மழை அளவு கண்காணிப்பிற்கான நவீன கருவி, பயிர் சாகுபடிக்கான பருவநிலை தகவல்களை உள்ளடக்கிய நாள்காட்டிகள், வானிலை முன்னறிவிப்பு கருவிகள், காற்றின் தரத்தை அறிய உதவும் கருவிகள், கடல்சார் பல்லுயிர் பெருக்க அறிக்கைகள் உள்ளிட்டவற்றை அமைச்சர் தொடங்கிவைத்தார்.

<<<<<>>>>>

நாட்டின் தொழில்துறை வளர்ச்சிக்கும், உற்பத்தியை ஊக்குவிக்கவும், டாக்டர் ஷியாம பிரசாத் முகர்ஜியின் பங்களிப்பு போற்றத்தக்கது என்று மத்திய கனரக தொழில்துறை இணையமைச்சர் திரு. பூபதிராஜு ஸ்ரீநிவாச வர்மா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் டாக்டர் ஷியாம பிரசாதின் 125ஆவது பிறந்த நாளையொட்டி இன்று நடைபெற்ற சொற்பொழிவில் உரையாற்றிய அவர், டாக்டர் ஷியாம பிரசாத் மத்திய அமைச்சராக இருந்த போது, தொழில்வளர்ச்சி மற்றும் தொழிற்கல்வி மேம்பாடு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டதாக கூறினார்.

தேசப்பற்று மிக்க அவர், சிறந்த கல்வியாளராகவும், நாடாளுமன்ற வாதியாகவும் திகழ்ந்தார் என்று அமைச்சர் தெரிவித்தார்.

ஒரே நாடு — ஒரே அரசியலமைப்புச் சட்டம் என்பதில் டாக்டர் ஷியாமா பிரசாத் முகர்ஜி மிகுந்த நம்பிக்கையுடன் இருந்தார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

<<<<<>>>>>

விவசாயப் பணிகளில் ட்ரோன் பயன்பாட்டை ஊக்குவிக்கும் மத்திய அரசின் முயற்சியாக, தமிழகத்தில் 5 மாவட்டங்களில் 50 ட்ரோன் பைலட்டுகளை உருவாக்குவதற்கான பயிற்சி நாகப்பட்டினத்தில் தொடங்கியது.

நாகை வேளாண் கல்லூரியும், நபார்டு வங்கியும் இணைந்து, திருக்கண்ணங்குடி கிராமத்தில் இப்பயிற்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது.

வேளாண் கல்லூரியின் முதல்வர் திரு. ரவி, இப்பயிற்சி குறித்து எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - முதல்வர் திரு. ரவி 38 செகண்ட்ஸ்)*

நபார்டு வங்கியின் மண்டல மேலாளர் சுமத்ரா, இந்தப் பயிற்சி விவசாயிகளுக்கு உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - சுமத்ரா 24 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

பஞ்சாபின் லூதியானாவில் யாத்ரிகர்களை ஏற்றிச் சென்ற வாகனம், கால்வாயில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 6 பேர் உயிரிழந்தனர்.

**Manakwal** கிராமத்தைச் சேந்த 29 பேர் அடங்கிய யாத்ரிகர்கள் குழு, ஒரு வழிபாட்டு தலத்திற்கு சென்றுவிட்டு, திரும்பியபோது அவர்கள் சென்ற வாகனம், பாரம் தாங்காமல் கால்வாயில் கவிழ்ந்ததாக லூதியானா துணை காவல் கண்காணிப்பாளர் திரு. **Himanshu Jain** தெரிவித்தார்.

விபத்தில் சிக்கிய 19 பேர் மீட்கப்பட்டுள்ளதாகவும், காணாமல் போன 4 பேரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

<<<<<>>>>>

தாய்லாந்தும் - கம்போடியாவும் சண்டை நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டுள்ளன.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இன்று நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தையில் இதற்கான உடன்பாடு ஏற்பட்டது.

இது, இன்று நள்ளிரவு முதல் அமலுக்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

ஜார்ஜியாவில் நடைபெற்ற உலகக்கோப்பை மகளிர் செஸ் சாம்பியன் போட்டியில் பட்டம் வென்ற இந்தியாவின் திவ்யா தேஷ்முக்-க்கும், இரண்டாவது இடம்பிடித்த கோனேரு ஹம்பிக்கும் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தமது பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.

குடியரசுத் தலைவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், முதல் முறையாக இந்தியாவை சேர்ந்த ஒரு பெண் தமது 19 வயதில் உலகக்கோப்பை மகளிர் செஸ் சாம்பியன் பட்டத்தை வென்றது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

கோனேரு ஹம்பி-யும் தொடர்ச்சியாக தனது திறமையை வெளிப்படுத்தி முயற்சி செய்ததாகவும், அவருக்கும் தமது பாராட்டுகளை தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியும், உலக மகளிர் செஸ் சாம்பியன் போட்டியில் பட்டம் வென்ற திவ்யா தேஷ்முக்-க்கும், இறுதிப்போட்டி வரை வந்த கோனேரு ஹம்பிக்கும் தமது பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.

இவர்களின் உழைப்பும், வெற்றியும் இளைய சமுதாயத்தினரை ஊக்கப்படுத்தும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய ரோலர் ஸ்கேட்டிங் சாம்பியன் போட்டியில் இந்தியா 4 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஆசிய **Cadet Taekwondo** சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஐந்து வெண்கலப்பதக்கங்களை வென்றது.

<<<<<END>>>>>